சுருக்கம்

உறுதியாக்கம்– கோயம்புத்தூர் மாநகராட்சி– திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப் பொறியாளர் (இயந்திரப் பொறியியல்) அவர்களுக்கு உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து உத்திரவிடப்பட்டது– அரசின் உறுதியாக்கம்– ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை

அரசு ஆணை (பத்தாண்டு) எண். 528 நாள் 16–12–2008

திருவள்ளுவராண்டு 2039, மார்கழித் திங்கள் 1–ம் நாள்

படிக்க

1.அரசாணை (நிலை) எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள் 26.09.1996

2.அரசாணை (நிலை) எண்.139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 27.05.1997

3.அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1997

4.அரசாணை (நிலை) எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள் 13.05.1998

5.நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண்.ந.க.எண்.4298/2008/எப்4, நாள் 29.05.2008

6.கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் கடித ந.க.எண்.177769/2006/எச்சி.1, நாள் 15.11.2008.

7.நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண்.4298/2008/எப்4, நாள் 5–12–2008

ஆணை:-

திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப் பொறியாளர் (இயந்திரப் பொறியியல்) கோயம்புத்தூர் மாநகராட்சி 1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் உட்பிரிவு (4)ன்படி இளநிலைப் பொறியாளராக வார்டு அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்தும் மற்றும் மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் ஒரு ஆண்டுக்கு மேலாக தொடர்ந்து

பணிபுரிந்து வருவதாலும் பார்வை 2ல் கண்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான முழு தகுதியினை பெற்றுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி தனியர் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பித்த 12.05.2008 நாளிட்ட மனுவில் தன்னை உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குமாறு கோரியிருந்தார். இதனை பரிசீலித்து பார்வை-யில் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரிக்கவும், திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை கவனிப்பதற்காகவும் மாநகராட்சி பிரதான அலுவலகத்திற்கென தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் பணியிடத்தினை அம்மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் இயந்திரப் பொறியியல் தேர்ச்சி பெற்று மேற்கூறிய தகுதியினை பெற்றுள்ள திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப் பொறியாளர் (இயந்திரப் பொறியியல்) அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. இதைத் தொடர்ந்து மாமன்றம் தீர்மான எண்.262, நாள் 30.10.2008–ல் *திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப் பொறியாளர் (இயந்திரப் பொறியியல்)* அவர்களை பிரதான அலுவலக உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி மாமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் திரு.சரவணகுமார் அவர்களை பணியமர்த்தி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் ஆணையிட்டுள்ளார். திரு.கோ.சரவணகுமார், உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் 31.10.2008 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியாற்றி வருகிறார்.

4. மேற்கண்ட மாமன்றத் தீர்மானம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் செயல்முறை ந.க.எண்.*177769/2006/எம்.சி.1*, நாள் *31.10.2008* தள்ளுபடி செய்து தனக்கு பதவி உயர்வு வழங்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சியைச் சேர்ந்த உதவி பொறியாளர் திரு.பா.பிரபாகரன், உயர்நீதி மன்றத்தில் (மதுரைப்பட்ட மனுக்கள் 2/08 (WP.MP) டபிள்யூ.பி.27061/2008) வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் இவ்வழக்கு தொடர்பாக எதிருரை ஆவணம் தாக்கல் செய்துவிட்டு அதன் நகலினை அனுப்புமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரைக் கோரியுள்ளதாகவும் மேற்கண்ட சூழ்நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் செயற் குறிப்பினை ஏற்று ஆணையிடலாம் எனவும் அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்தபின் அவரது பரிந்துரையை ஏற்று, *30.10.2008* நாளிட்ட கோயம்புத்தூர் மாமன்றத் தீர்மான எண்.282–ன் அடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மாநகராட்சி பிரதான அலுவலக பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும்

திரு.கோ.சரவணகுமார் (இயந்திரப் பொறியியல்) அவர்களை கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்தில், தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கி நியமனம் செய்ததற்கு நிலுவையில் உள்ள, மேலே பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்பிற்குட்பட்டு உறுதியாக்கம் வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம்,
சென்னை-108
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அநி2) துறை,
சென்னை-9
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ([illegible] துறை, சென்னை-9
உதிரி / இ.கோ.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்

16/12/08